செய்தி வெளியீடு எண்: 137 நாள்: 21.02.2012

## தேசிய கைத்தறி கண்காட்சியில் ரூ.1 கோடி விற்பனை

## மக்களிடமிருந்து அமோக வரவேற்பு

சென்னை எழும்பூரில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி கண்காட்சி திடலில் 10.2.2012 அன்று துவக்கப்பட்ட தேசிய கைத்தறி கண்காட்சி 2012, தொடர்ந்து 5.3.2012 வரை நடைபெற்று வருகிறது. இந்த கண்காட்சியில், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான அனைத்து மாநில துணி வகைகளை வாடிக்கையாளர்கள் பெருமளவில் வந்து வாங்கிச் சென்றதன் பயனாக, இதுவரை ரூ.102.00 இலட்சம் அளவிற்கு விற்பனையாகி உள்ளது. இந்த கண்காட்சி மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது தெரிய வருகிறது. இக்கண்காட்சி இனிமேல் காலை 10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறும். இந்த கண்காட்சிக்கு என்று நுழைவு கட்டணம் எதுவும் கிடையாது. இக்கண்காட்சியில் விற்பனையாகும் இரகங்களுக்கு சிறப்பு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

இந்த தேசிய கைத்தறி கண்காட்சியில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள தலைமை கூட்டுறவு சங்கங்களும், பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் கலந்துகொண்டு, தங்களது உற்பத்தி இரகங்களான பட்டு மற்றும் பருத்தி சேலைகள், இல்லத்திற்குத் தேவையான துணி வகைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் அனைத்து விதமான துணி இரகங்களை சென்னை மற்றும் புறநகரங்களில் வசிக்கும் வாடிக்கையாளர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் வண்ணம் இந்த கண்காட்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்களின் நலனுக்காக பட்டு இரகங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களிடமிருந்து பாரம்பரியமிக்க பட்டுப்புடவைகளைப் பெற்று, இந்த கண்காட்சியில் பார்வைக்கு வைத்து, பட்டுத் துணிகளைப் பராமரித்தல் குறித்து விளக்கம் தரப்படுகிறது. இந்த கண்காட்சியில் வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட 1912 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரையிலான 80 வருட பாரம்பரியமிக்க பட்டுப் புடவைகள் வாடிக்கையாளர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும். இது வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த வருடம், தேசிய கைத்தறி கண்காட்சிக்கு 3 இலட்சம் மக்கள் வருகைபுரிந்தமையால் ரூ.3.00 கோடி அளவிற்கு விற்பனை சிறப்பாக நடைபெற்றது. அதேபோன்று, இந்த வருடம், சுமார் 5 இலட்சம் மக்கள் கண்காட்சிக்கு வருகைபுரிவார்கள் எனவும், ரூ.5.00 கோடி அளவிற்கு விற்பனையாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தேசிய கைத்தறி கண்காட்சியில் தமிழகம் மற்றும் இதர மாநிலங்களில் பிரசித்திப் பெற்று விளங்கும் 110 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பங்கேற்று, தங்களது மாநிலங்களில் உற்பத்தியாகும் பிரத்தியேகத் துணி இரகங்களை வாடிக்கையாளர்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் காட்சிக்கும், விற்பனைக்கும் வைத்துள்ளது என்பது இந்த தேசிய கைத்தறி கண்காட்சியின் மேலும் ஒரு சிறப்பு அம்சமாகும்.

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.